# தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ஆரம்பப் பயிற்சிக்கு மிகவும் பொருத்தமான இராகத்தைக் கண்டறிவதற்கான செயல்நிலை ஆய்வு

ஸ்ரீ.தர்ஷனன்,


**ஆய்வுச்சுருக்கம்**

*தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ஆரம்பப் பயிற்சிக்கு உபயோகிக்கப்பட்டுவரும் மாயாமாளவகௌளை இராகத்தின் பொருத்தப்பாட்டையும், இந்த இராகத்தைவிட மிகவும் பொருத்தமானதாக வேறொரு இராகம் அமையமுடியுமா என்பதையும் ஆராயும் நோக்கில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவரிடையே நடத்தப்பட்ட செயல்நிலை ஆய்வே இதுவாகும். ஆய்வின் முடிவுகள் ஹரிகாம்போதி இராகமே மிகவும் பொருத்தமானது என்பதைக் காட்டி நிற்கின்றன.*


**1. அறிமுகம்**

தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ஆரம்பப் பயிற்சிக்கு மாயாமாளவகௌளை இராகமே உபயோகிக்கப்பட்டு வருகிறது.[1] ஸ்ரீபுரந்தரதாஸரால் இயற்றப்பட்ட ஆரம்பப் பயிற்சி வரிசைகளான ஸ்வரவரிசை, ஜண்டை வரிசை, மேல்ஸ்தாயி வரிசை, கீழ்ஸ்தாயி வரிசை, தாட்டு வரிசை, ஸப்ததாள அலங்காரங்கள் ஆகிய அனைத்துமே மாயாமாளவகௌளை இராகத்திலேயே கற்பிக்கப்பட்டு வருகின்றன.[2] இப்பயிற்சிகள் ஏறக்குறைய மூன்று வருடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பூர்த்தி செய்திருந்தும், கணிசமானளவு மாணவர்கள் மாயாமாளவகௌளை இராகத்துக்குரிய ஸ்வரஸ்தானங்களைச் சரியாக இசைக்காதிருப்பது ஆய்வாளரால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த அவதானிப்பானது ஆரம்பப் பயிற்சிகளை வழங்குவதில் மாயாமாளவ கௌளை இராகத்தைப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாட்டினை மீளாய்வு செய்யவேண்டிய தேவையை உணர்த்தி நிற்கின்றது.[3] மேலும் உலகில் வழங்கிவரும் மற்றைய இசைவகைகளான மேலைத்தேய இசையிலும், ஹிந்துஸ்தானி இசையிலும் சங்கராபரணம் எனும் இராகமே ஆரம்பப் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும்போது, தென்னிந்திய சாஸ்திரீய இசையில் மட்டும் மாயாமாளவ கௌளை இராகத்தின் பயன்பாடானது, மீளாய்வு செய்ய வேண்டிய தேவையை மேலும் வலியுறுத்தியுள்ளது.[4]

**2. முறையியல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத் துறையின் மூன்றாம், நான்காம் ஆண்டுப் பட்டப்படிப்பிலிருந்து எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களை உபயோகித்து இந்த ஆய்வு 20.08.2004, 23.08.2004, 24.08.2004, 27.08.2004 ஆகிய நான்கு தினங்களில் செய்யப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக ஹரிகாம்போதி, சங்கராபரணம், கரஹரப்ரியா, மாயாமாளவ கௌளை ஆகிய நான்கு இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களையும் பாடிக் காட்டுமாறு கேட்கப்பட்டது. ஒவ்வொரு

இராகத்துக்குரிய ஆரோகண அவரோகணங் களையும் பாடிக்காண்பிக்குமாறு கேட்கப்பட முன்னர் ஆய்வாளரால் மாணவர்களுக்கு அவை பாடிக்காட்டப்பட்டன. அவர்களால் பாடப்பட்ட ஒவ்வொரு ஸ்வரஸ்தானங்களும் சரியா தவறா என்னும் விடயம் ஆய்வாளரால் தனித்தனியே பதிவு செய்யப்பட்டது. மாணவர்களால் தவறிழைக்கப்பட்டபோது, ஆய்வாளரால் அவை திருத்திவிடப்பட்ட பின்னர், மீண்டும் பாடிக்க ாட்டுமாறு கேட்கப்பட்டது. இருதடவைகள் திருத்தப்பட்ட பின்னரும் திருந்தாத தவறுகள் பதிவுசெய்யப்பட்டன.

### 2.1 ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட மாணவர் களின் தன்மை

இருபத்தொரு வயதுமுதல் இருபத் திரண்டு வயது வரையான மாணவர்கள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரையான ஏழு வருடங்கள் பாடசாலை யில் தென்னிந்திய சாஸ்திரீய இசையை ஒரு பாடமாகக் கற்றிருக்கிறார்கள். இலங்கை அரசினால் நடத்தப்படும் கனிஷ்ட பொதுத் தராதர சாதாரண, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றி, இசையில் சித்திபெற்றவர்கள். இதற்கு மேலதிகமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இசையாசிரியர்களிடம் பிரத்தியேகமாக இசை யைக் கற்றிருக்கிறார்கள். இவர்களில் பெரும் பான்மையானவர்கள் வட இலங்கை ஸங்கீத சபையினரால் நடத்தப்படும் இசைப் பரீட்சை களுக்குத் தோற்றித் தேர்ச்சியடைந்திருந் தார்கள்.

### 2.2 ஹரிகாம்போதி இராகம் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள்

பண்டைய தமிழிசை நூல்களில் ஹரிகாம் போதி இராகமே அடிப்படை இராகமாகவும், முதலில் இசைக்கப்பட்ட இராகமாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.[5] முதலில் தோன்றிய இசைக் கருவியாகக் குறிப்பிடப்பட்டுள்ள புல்லாங் குழலில் இயற்கையாகத் தோன்றும் இராகமாக வும் ஹரிகாம்போதியே விளங்குகிறது.[6] மேற்கூறப்பட்ட காரணங்களால் இவ்விராகத் தின் ஸ்வரஸ்தானங்களில் இலகுவாகப் பாடக்கூடிய தன்மை காணப்படலாமென ஆய்வாளர் கருதியதால் ஹரிகாம்போதி இராகமும் ஆய்விலே சேர்த்துக் கொள்ளப் பட்டது.

### 2.3 சங்கராபரண இராகம் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள்

மேலைத்தேய இசையிலும், ஹிந்துஸ்தானி இசையிலும் ஆரம்பப் பயிற்சிகளுக்காகச் சங்கராபரண இராகம் பயன்படுத்தப்பட்டு வரு வதன் காரணமாக, அவ்விராகத்தில் சுலபமாகப் பாடக்கூடிய தன்மைகள் இருக்கலாமென ஆய்வாளர் கருதியதால் அதுவும் ஆய்விலே சேர்த்துக்கொள்ளப்பட்டது.

### 2.4 மாயாமாளவகௌளை இராகம் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள்

ஏற்கனவே தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ஆரம்பப் பயிற்சிக்குப் பயன்பாட்டி லுள்ள இராகமாக மாயாமாளவகௌளை விளங்குகிறது. தென்னிந்திய சாஸ்திரீய இசையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இராகங்கள் உள்ளபோதும் மாயாமாளவ கௌளை இராகம் ஆரம்பப் பயிற்சிக்கு உபயோகிக்கப்பட்டு வருவதற்கான காரணங் களாக இசையியலாளர்கள் பின்வருபவற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள்.[7]

- தாய்இராகமாக இருக்கிறது.

- சுபமான இராகமாக விளங்குகிறது.
- ஸ–ரி, க–ம, ப–த, நி–ஸ் என்றவாறு ஸ்வரங்கள் சோடிசோடியாக அமைந்துள்ளதால் ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்களுக்கு இசைப்பதற்கு இலகுவாக இருக்கும். விசேடமாக வீணையில் வாசிப்பதற்கு மிகஇலகுவானது.
- மாயாமாளவகௌளை இராகத்திலுள்ள ஏழு ஸ்வரங்களுள், ஸட்ஜம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம் எனும் நான்கு ஸ்வரங்களும் ஸ்ருதியுடன் இணையக்கூடிய ஸ்வரங்களாக அமைந்துள்ளதால் ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்களுக்கு இசைப்பதற்கு இலகுவாக இருக்கும்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் முற்பகுதியிலுள்ள ஸ்வரங்களும், பிற்பகுதியிலுள்ள ஸ்வரங்களும் சமச்சீரகக் காணப்படுகின்றன.
- விவாதி தோஷமுள்ள ஸ்வரங்கள் இடம் பெறவில்லை.

மேற்கூறப்பட்ட காரணங்களால் இவ்விராகம் இவ்வாய்வில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

### 2.5 கரஹரப்ரியா இராகம் இவ்வாய்விலே சேர்க்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள்

இவ்வாய்விலே உபயோகப்படுத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஹரிகாம்போதி இராகத்தின் முற்பகுதியிலுள்ள ஸ்வரங்களும், பிற்பகுதியிலுள்ள ஸ்வரங்களும் சமச்சீரின்றிக் காணப்படுகின்றன. சமச்சீரற்ற இராகத்தின் ஸ்வரஸ்தானங்களைப் பாடுவதில் கஷ்டத்தை எதிர்நோக்கும் மாணவர்கள், ஹரிகாம்போதி இராகத்திலிருந்து காந்தாரமாகிய ஒரேஒரு ஸ்வரஸ்தானம் வேறுபட்டதால் மட்டுமே வித்தியாசமாகக் காணப்படுகின்றதும், சமச்சீரானதுமான கரஹரப்ரியா இராகத்தை இலகுவாகப் பாடக்கூடுமென ஆய்வாளர் கருதியதால், இவ்விராகமும் ஆய்விலே சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

### 3. அவதானிப்புகள்

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 50 மாணவர்களுள் 50 பேருமே ஹரிகாம்போதி இராகத்தின் ஏழு ஸ்வரஸ்தானங்களையுமே சரியாகப் பாடிக் காண்பித்திருந்தார்கள். இது 100 சதவீதமாகும்.

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 50 மாணவர்களுள் 49 பேர் சங்கராபரண இராகத்தின் ஏழு ஸ்வரஸ்தானங்களையுமே சரியாகப் பாடிக் காண்பித்திருந்தார்கள். இது 98 சதவீதமாகும். ஒரு மாணவர் நிஷாத ஸ்வரத்தைப் பாடுவதில் தவறிழைத்துள்ளார். நிஷாதத்தைப்பாடுவதில் தவறிழைத்தவர் மேல்ஸ்தாயி ஸட்ஜத்துக்குரிய இடத்தில் காகலிநிஷாதத்தைப் பாடியிருந்தார்.

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 50 மாணவர்களுள் 39 பேர் கரஹரப்ரியா இராகத்தின் ஏழு ஸ்வரஸ்தானங்களையுமே சரியாகப் பாடிக் காண்பித்திருந்தார்கள் இது 78 சதவீதமாகும். 11 பேர் காந்தார ஸ்வரத்தைப் பாடுவதில் தவறிழைத்தார்கள். காந்தாரத்தைப் பாடுவதில் தவறிழைத்தவர்கள் அந்தர காந்தாரத்துக்குரிய இடத்தில் சாதாரண காந்தாரத்தைப் பாடினார்கள்.

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 50 மாணவர்களுள் 35 பேர் மாயாமாளவகௌளை இராகத்தின்ஏழு ஸ்வரஸ்தானங்களையுமே

சரியாகப் பாடிக்காண்பித்திருந்தார்கள். இது 70 சதவீதமாகும். 05 பேர் ரிஷப ஸ்வரத்தைப் பாடுவதிலும், 08 பேர் தைவத ஸ்வரத்தைப் பாடுவதிலும், 05 பேர் நிஷாத ஸ்வரத்தைப் பாடுவதிலும் தவறிழைத்திருந்தார்கள். ரிஷபத்தைப் பாடுவதில் தவறிழைத்தவர்கள் மத்தியஸ்தாயி ஸட்ஜத்துக்குரிய இடத்தில் சுத்தரிஷபத்தையும், தைவதத்தைப் பாடுவதில் தவறிழைத்தவர்கள் பஞ்சமத்துக்குரிய இடத்தில் சுத்ததைவதத்தையும், நிஷாதத்தைப் பாடுவதில் தவறிழைத்தவர்கள் மேல்ஸட்ஜத்துக்குரிய இடத்தில் காகலிநிஷாதத்தையும் பாடினார்கள்.

மொத்தமாக சங்கராபரண இராகத்தில் ஒரு தவறும், கரஹரப்ரியா இராகத்தில் பதினொரு தவறுகளும், மாயாமாளவகௌளை இராகத்தில் பதினெட்டுத் தவறுகளும் இழைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. ஹரிகாம்போதி இராகத்தில் எந்தவொரு தவறும் அவதானிக்கப்படவில்லை.

## 4. விவரிப்பும் முடிவுகளும்

மாயாமாளவகௌளை இராகத்துக்குரிய ஸ்வரஸ்தானங்களில் ஏறக்குறைய மூன்று வருடங்கள் பயிற்சிபெற்றிருந்த போதிலும், இந்த இராகத்துக்குரிய ஏழு ஸ்வரஸ்தானங்களுள் ரி,த,நி ஆகிய மூன்று ஸ்வரங்களில் மிகப் பெரும்பான்மையான மாணவர்கள் தவறிழைத் திருக்கிறார்கள். இந்த அவதானிப்பிலிருந்து மேற்கண்ட மூன்று ஸ்வரங்களையும் பாடுவதில் மாணவர்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர் நோக்குகிறார்கள் என்பது தெளிவாகிறது. இதற்குரிய காரணங்களாகப் பின்வரும் வற்றைக் குறிப்பிடலாம்.

- ஸட்ஜத்துக்கும் சுத்தரிஷபத்துக்குமிடையிலும், பஞ்சமத்துக்கும் சுத்ததைவதத்துக்கு மிடையிலும், காகலிநிஷாதத்துக்கும் மேல்ஸ்தாயி ஸட்ஜத்துக்குமிடையிலும் உள்ள ஸ்ருதி இடைவெளிகள் மிகச்சிறிய வையாக இருப்பதால் இச்சிறிய இடைவெளி களை உணர்ந்துகொண்டு பாடுவது மாணவர்களுக்குக் கஷ்டமான விடயமாக உள்ளது.

- ஸ்வரஞானத்தைக் குறைவாகக் கொண்டுள்ள மாணவர்கள் சுத்தரிஷபம், சுத்ததைவதம், காகலிநிஷாதம் ஆகிய ஸ்வரங்களுக்கு மறுபக்கத்திலிருக்கும் ஸ்வரம் அதிக சுருதி இடைவெளியுடன் காணப்படும்போது, இவற்றுக்கு முறையே மிகநெருக்கமாக உள்ள ஸட்ஜம், பஞ்சமம், மேல்ஸ்தாயி ஸட்ஜம் ஆகிய ஸ்வரங்கள் ஸ்ருதி வாத்தியத்தில் ஒலித்துக் கொண்டி ருப்பதாலும், இவை ஸ்ருதியுடன் மிகவும் ஒன்றித்துச் சேர்வதாலும் இச்சுரங்களை நோக்கித் தம்மையறியாமலேயே ஈர்க்கப் பட்டு விடுகிறார்கள்.

அதைவேளை ஸட்ஜம், பஞ்சமம், மேல்ஸ்தாயிஸட்ஜம் ஆகிய ஸ்வரங்களுக்கு அருகாமையிலில்லாத சதுஸ்ருதிரிஷபம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் போன்ற ஸ்வரஸ்தானங்களைக் கொண்டமைந்துள்ள இராகமாகிய ஹரிகாம்போதி இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை நூறு சதவீதமான மாணவர்கள் சரியாகப் பாடியிருக்கிறார்கள். இதிலிருந்து ஸட்ஜம், பஞ்சமம், மேல்ஸ்தாயி ஸட்ஜம் ஆகிய ஸ்வரங்களுக்கு அருகாமையில் ஸ்வரஸ்தானங்களைக் கொண்டமையாத இராகங்களுக்குரிய ஸ்வரஸ்தானங்களையே மாணவர்கள் இலகுவாகப் பாடுகிறார்கள் என்ற முடிவுக்கு வரலாம்.

மேலும் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள நான்கு இராகங்களுள், மாயாமாளவ கௌளையைப் பயிற்சி செய்த அளவுக்கு வேறு எந்த வொரு இராகத்தையும் மாணவர்கள் இதற்கு முன்னர் பயிற்சி செய்திருக்கச் சாத்தியமில்லை. சில மாணவர்கள் ஆய்வாளரிடமிருந்து தான் முதன்முதலாக ஹரிகாம்போதி இராகத்தின் ஸ்வரஸ்தானங்களைக் கற்றுக்கொண்டார்கள். அப்படியிருந்தும் மேற்கண்ட அவதானிப்புகள் கிடைத்திருப்பதானது மேலே எட்டப்பட்டுள்ள ஆய்வின்முடிவைச் சந்தேகத்துக்கிடமின்றி உறுதிசெய்கின்றது. காகலிநிஷாதத்தைக் கொண்டுள்ள இன்னொரு இராகமாகிய சங்கராபரணத்திலும், காகலிநிஷாதத்தைப் பாடியபோது தவறிழைக்கப்பட்டுள்ளது என்னும் அவதானிப்பும் ஆய்வின்முடிவுக்கு மேலும் வலுச்சேர்க்கிறது.

அந்தரகாந்தாரமானது தம்புராவாகிய ஸ்ருதிவாத்தியத்தில் ஸ்வயம்பு ஸ்வரமாக ஒலித்துக்கொண்டிருப்பதாலும், இது ஔஅளவுக்கு ஸ்ருதியுடன் ஒன்றக்கூடிய ஸ்வரமாக இருப்பதாலும் கரஹரப்ரியா இராகத்திலுள்ள சாதாரண காந்தாரத்தைப் பாடும்போது இதற்கு மிக அருகாமையிலுள்ள அந்தரகாந்தாரத்துக்கு மாணவர்கள் ஈர்க்கப்பட்டு விடுகிறார்கள் என்பதை அவதானிப்புகள் காட்டிநிற்கின்றன.

கரஹரப்ரியாவின் முற்பகுதியும் பிற்பகுதியும் சமச்சீராக இருந்தும் கூட இத்தவறு நேர்ந்தமையானது சமச்சீர்த்தன்மையை விட, ஸ்ருதியோடு சேர்ந்தொலிக்கும் ஸ்வரங்களுக்கு மிக அருகாமையிலுள்ள ஸ்வரஸ்தானங்களைப்பாடும்போது மாணவர்கள் ஸ்ருதியின் உந்துதலுக்கு ஆட்பட்டுத் தம்மையறியாமலேயே தவறாகப் பாடிவிடும் தன்மையானது சக்தி வாய்ந்ததாக இருப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இவ்வாய்வில் எட்டப்பட்டுள்ள முடிவுகளிலிருந்து ஹரிகாம்போதி இராகமே தென்னிந்திய சாஸ்திரீய இசையின் ஆரம்பப் பயிற்சிக்கு மிகவும் பொருத்தமான இராகம் என்று பரிந்துரை செய்யப்படுகிறது.

இச்செயல்நிலை ஆய்வானது குரலிசையை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்டிருப்பது போன்று வீணை, வயலின், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளை உபயோகித்தும் ஆய்வுகள் நடத்தப்படலாம். மேலைத்தேய இசை, ஹிந்துஸ்தானி இசை போன்ற மற்றைய இசைமுறைகளிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படலாம். பல்கலைக்கழக மாணவர்களை உபயோகித்து மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வு பாடசாலை மாணவர்களை நோக்கியும் விஸ்தரிக்கப்படலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. Vidya Shankar; 1997," **Aesthetic and Scientific Values in Carnatic Music.** 'Paramparra', Chennai, p.23
2. Loc. Cit.,
3. Ibid., p.24
4. Sambamurthy, P; 1998, **The teaching of Music**, The Indian Music Publishing House, Chennai, P.81
5. Text book for M.Music; 2001, **History of Music - Tamil Tradition**, University of Madras, India, p.32.
6. Op. Cit. Vidya Shankar, Aesthetic ...................., p.24.
7. Op. Cit. Sambamurthy, P., The teaching..........., p.81.
8. Op. Cit. Vidya Shankar, Aesthetic...................., p.24.